செ.வெ.எண். 11 நாள்: 05.02.2020

**காவேரிப்பட்டிணம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பாக ரூ. 1 கோடியே 62 லட்சம் மதிப்பிலான புதிய பெட்ரோல் மற்றும் டிசல் விற்பனை மையத்தை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜீ அவர்கள்**

**இன்று ( 05.02.2020) திறந்து வைத்தார்.**

**கூட்டுறவுத்துறையின் 38 பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகிறது. இன்று கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் சந்தாபுரத்தில் 39 - வது புதிய பெட்ரோல் பங்க் திறந்துவைக்கப்பட்டுள்ளது.**

**மேலும் 12 பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் திறக்கப்படவுள்ளது.**

**மாநிலம் முழுவதும் அனைத்து வகைக்கடன்கள் 2011 முதல் 31.12.2019 வரை 7 கோடியே 27 லட்சத்து 87 ஆயிரத்து 526 நபர்களுக்கு ரூ.3,58,492.82 கோடி வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் திரு.கே.ராஜீ அவர்கள் பெருமிதம்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பாக ரூ. 1 கோடியே 62 லட்சம் மதிப்பிலான புதிய பெட்ரோல் மற்றும் டிசல் விற்பனை மையத்தை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜீ அவர்கள் இன்று ( 05.02.2020) திறந்து வைத்து 1802 பயனாளிகளுக்கு ரூ.13 கோடியே 43 இலட்சத்து 9 ஆயிரம் மதிப்பிலான பயிர் கடன் மற்றும் தொழிற்கடன் உதவிகளை உதவிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி.நா.மனோரஞ்சிதம்நாகராஜ், திரு.சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் அவர்கள் முன்னிலை வகித்தார்.

**பின்பு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது:**

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய, நடுத்தர மக்கள், விவசாயிகள், வியாபாரிகள், மகளிர் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்திவருகிறார்.

மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழகம் முழுவதும் 2011 முதல் 22.01.2020 வரை 91 லட்சத்து 60 ஆயிரத்து 351 நபர்களுக்கு ரூ.48960.76 கோடி பயிர்க்கடன் வழங்கியுள்ளது. நடப்பாண்டு 22.01.2020 வரை 10,01,729 நபர்களுக்கு ரூ.7,170.59 கோடி பயிர்க்கடன் வழங்கியுள்ளது.

தர்மபுரி மண்டலத்தில் 2,33,752 நபர்களுக்கு ரூ.1,211.49கோடி பயிர்க்கடனும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 1,06,535 நபர்களுக்கு ரூ.599.06கோடி மதிப்பில் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு தர்மபுரி மண்டலத்தில் 22.01.2020 வரை 36,250 விவசாயிகளுக்கு ரூ.246.42 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 31.01.2020 வரை 14,632 நபர்களுக்கு ரூ.116.06 கோடி மதிப்பிலும் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

2016 முதல் தமிழகம் 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 விவசாயிகளுக்கு ரூ.5,318.73 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மண்டலத்தில் 133 சங்கங்கள் மூலம் 27,924 விவசாயிகளுக்கு ரூ.138.88 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 123 சங்கங்கள் வாயிலாக 13,599 விவசாயிகளுக்கு ரூ.86.70 கோடியும் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 2013-14 முதல் 31.12.2019 வரை காய்கறி பயிர் செய்யும் 4லட்சத்து 7 ஆயிரத்து 416 விவசாயிகளுக்கு ரூ.3,282.25 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. தர்மபுரி மண்டலத்தில் காய்கறி பயிர் கடனாக ரூ.45.91 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் ரூ.53.71 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

பயிர்க்காப்பீட்டு இழப்பீடு திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 31,43,970 விவசாயிகளுக்கு ரூ.7,238.74கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் தர்மபுரி மண்டல்தில் 20,051 விவசாயிகளுக்கு ரூ.20.11 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 2217 விவசாயிகளுக்கு ரூ.1.07 கோடியும் பயிர்காப்பீடு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு கூட்டுறவுத்துறையின் மூலம் 2011 முதல் 31.12.2019 வரை மாநிலம் முழுவதும் 60,727 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.247.37 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் தர்மபுரி மண்டலத்தில் 2009 நபர்களுக்கு ரூ.5.24 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 1,360 நபர்களுக்கு ரூ.7.16 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் நகைக்கடனாக 6 கோடியே 05 ஆயிரத்து 327 நபர்களுக்கு ரூ.2,30,371.79 கோடியும், தர்மபுரி மண்டலத்தில் 11,41,784 நபர்களுக்கு ரூ.3,875.78 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 5,73,651 நபர்களுக்கு ரூ.2,609.78 கோடியும் நகைக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தானிய ஈட்டுக்கடனாக மாநிலம் முழுவதும் 2011 முதல் 31.12.2019 வரை 1,97,464 நபர்களுக்கு ரூ.2,450.15 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் தர்மபுரி மண்டலத்தில் 2617 நபர்களுக்கு ரூ.50.59 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 654 நபர்களுக்கு ரூ.12.07 கோடியும் தானிய ஈட்டுக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

சிறுவணிகக்கடன் மாநிலம் முழுவதும் 2011முதல் 31.12.2019 வரை 15,41,279 நபர்களுக்கு ரூ.1,866.66 கோடியும், தர்மபுரி மண்டலத்தில் 19,806 நபர்களுக்கு ரூ.26.84 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 14,603 நபர்களுக்கு ரூ.22.94 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. **சிறுவணிகக்கடன் தொகை 10.09.2019 முதல் ரூ.50,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டுவருகிறது.**

தர்மபுரி மண்டலத்தில் 15,86,842 நபர்களுக்கு ரூ.6,947.54 கோடியும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 7,93,887 நபர்களுக்கு ரூ.4,763.06 கோடியும் அனைத்து வகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் ரூபே பற்று அட்டைகள் 2,89,729 நபர்களுக்கும், ரூபே விவசாய கடன் அட்டைகள் 3,70,554 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. தர்மபுரி மண்டலத்தில் 8075 ரூபே பற்று அட்டைகளும், 6902 ரூபே விவசாய கடன் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மண்டலத்தில் 8,095 ரூபே பற்று அட்டைகளும், 6147 ரூபே விவசாய கடன் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 5,853 சங்கங்கள் ரூ.189.51 கோடி மதிப்பில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. 2011 முதல் 31.12.2019 வரை தமிழகம் முழுவதும் 652 சங்கங்கள் ரூ.76.38கோடி மதிப்பிலும், கிருஷ்ணகிரியில் உள்ள தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 4 கிளைகள் ரூ.23.63 லட்சம் மதிப்பிலும், தர்மபுரி மத்திய கூட்டுறவு வங்கியின் 8 கிளைகள் ரூ.66.90லட்சம் மதிப்பிலும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 2011 முதல் 31.12.2019 வரை 5,10,600 மெ.டன் கொள்ளளவு கொண்ட 3879 கிடங்குகள் ரூ.489.62 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 165 கிடங்குகள் ரூ.42.86 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பு ரூ.1000/- ரொக்கத்துடன் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்ததற்கு இணங்க 1,98,20,999 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு எவ்வித புகாருக்கும் இடமின்றி வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 103 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் முதற் கட்டமாக திறக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 582 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்க அறிவிக்கப்பட்டு இதுவரை474 அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்பட மாநிலம் முழுவதும் 23,485 முழுநேர கடைகளும், 9,473 பகுதிநேரக் கடைகளும் என மொத்தம் 32,958 கடைகள் செயல்படுகிறது. இதில் புதியதாக 675 முழுநேரக் கடைகளும், 1746 பகுதிநேரக் கடைகளும் என புதிதாக 2421 கடைகள் திறக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மண்டலத்தில் 15 முழுநேர கடைகளும், 60 பகுதிநேரக்

கடைகளும், கிருஷ்ணகிரி மண்டலத்தில் 28 முழுநேரக் கடைகளும், 61 பகுதிநேரக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறையின் 116 அம்மா மருந்தகம் மற்றும் 172 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 31.12.2019 வரை ரூ.918.85 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மண்டலத்தில் 2 அம்மா மருந்தகம், 5 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.9.48 கோடி மதிப்பில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மண்டலத்தில் உள்ள 3 அம்மா மருந்தகம், 3 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.21.58 கோடி மதிப்பில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள 79 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 31.01.2020 வரை 52,006 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.153.71 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி காலத்தில் ஏழை எளிய பெண்கள் மற்றும் நடுத்தரகுடும்பத்தினரின் வாழ்வாதாரம் உயர்வதற்காக பெண்களை மையப்படுத்தியே எண்ணற்ற திட்டங்களான விலையில்லா ஆடுகள், கறவைபசுகள், மிக்ஸி,கிரைண்டர், மின்விசிறி, தாலிக்கு தங்கம், அம்மா பரிசு பெட்டகம், போன்ற திட்டங்களும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா சைக்கிள், விலையில்லா மடிக்கனிணி, கல்வி உபகரணங்கள் போன்ற எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஒரே ஆண்டில் மட்டும் தமிழக அரசு 11- மருத்துவ கல்லூரிகளை துவக்க அனுமதி அளித்துள்ளது. எனவே விவசாய பெருமக்கள் மகளிர் குழுவினர் கூட்டுறவு துறை சார்பாக நலத்திட்டங்களை பெற்று தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் திரு.பா.பாலகிருஷ்ணா ரெட்டி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.அசோக்குமார், கூட்டுறவுத்துறையின் ஆலோசகர் திரு.இரா.கார்த்திகேயன், கூடுதல் பதிவாளர்கள் திரு.ஆர்.ஜி.சக்தி சரவணன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர், திரு.மு.முருகன், திருமதி.இரா.பிருந்தா, திருமதி.வெ.லட்சுமி, இணை பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர் செல்வி.ரேணுகா, கூட்டுற சங்க இணை பதிவாளர்கள் திரு.ம.சந்தானம், திரு.ராமதாஸ், இந்தியன் ஆயில் நிறுவனம் முதன்மை மண்டல சில்லரை விற்பனை மேலாளர்கள் திரு.அ.சிவகுமார், திருமதி.ச.மாரீஸ்வரி, துணை மேலாளர் திரு.அ.கதிரவன், கிருஷ்ணகிரி பால்உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.குப்புசாமி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் திரு.எஸ்.எம்.மாதையன், காவேரிப்பட்டிணம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் திரு.பி.டி.சுந்தரேசன், ஒன்றியக்குழுத்தலைவர் திரு.பையூர் ரவி, மற்றும் கூட்டுறவுசங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசுத்துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.